செ.வெ.எண்: 119/2017 நாள்:15.02.2017

**அரசு அலுவலர்கள் / ஊழியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் (2016 - 2017) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு அரசு ஆணையின்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 2016 - 2017 - ம் ஆண்டிற்கான மாநில அளவிலான அரசு அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெவுள்ளது. மாநில அளவிலான போட்டிகளில் கலந்துக்கொள்ளும் பொருட்டு, மாவட்ட அளவிலான அரசு அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் வைத்து 02.03.2017 காலை 9.00 மணி முதல் நடைபெவுள்ளது. இதில் தடகளம், கூடைப்பந்து, கபாடி, வாலிபால், இறகுப்பந்து, மேஜைப்பந்து, டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்கள் இருபாலருக்கும், கால்பந்து போட்டியானது ஆண்களுக்கு மட்டும் நடைபெறவுள்ளது. இதில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெறும் வீரர்/ வீராங்கணைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தமிழக அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் இதில் கலந்துக் கொள்ள தகுதி உடையவர்கள் ஆவார்கள்.
- சீருடை பணியாளர்கள், தினகூலி அடிப்படை பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், தற்காலிக பணியாளர்கள், ஆறு மாதத்திற்கு குறைவாக பணியாற்றும் நிரந்தர பணியாளர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் இதில் பங்கேற்க இயலாது.

நடைபெறும் தடகள போட்டிகள்

ஆண்கள்: 100 மீ, 200 மீ, 800 மீ, 1500 மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் குண்டு எறிதல், 4X 100 மீ தொடர் ஓட்டம்,

பெண்கள்: 100 மீ, 200 மீ, 800 மீ, 1500 மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு ஏறிதல், 4X 100 மீ தொடர் ஓட்டம்

மாவட்ட அளவிலான விளையாட்டுக்களில் தேர்வு செய்யப்படும் சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கணைகள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துக் கொள்ள தகுதி உடையவர்கள் ஆவார்கள். மாநில அளவில் கலந்துக் கொள்ளும் வீரர் / வீராங்கணைகளுக்கு சீருடைகள் வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: 7401703507 / 04652 232060. கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த பெருவாரியான அரசு அலுவலகங்களில் பணிபுரியும் வீரர்கள் / வீராங்கணைகள் இப்போட்டிகளில் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமது செய்திக் குறிப்பில் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.